⋆ அ. உலக நீதிப் பாடல்களின் பொருளைத் தெரிவு செய்து கூறுக. அதன் எண்ணை எழுதுக.

| உலகநீதி | பொருள் |
|---|---|
| நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம். | |
| நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம். | |
| நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம். | |
| நல்லிணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம். | |
| அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம். | |
| அடுத்தவரை ஒரு நாளும் கெடுக்க வேண்டாம். | |

1. நிலையற்றது என்று தெரிந்தும் அதை நிலை நிறுத்த முயலக் கூடாது.
2. பயம் இல்லாமல் தனியாகப் பயணம் செய்யக் கூடாது.
3. நட்பு இல்லாதவருடன் பழக்கம் வைத்துக் கொள்ளக் கூடாது.
4. நஞ்சுடைய பாம்புடன் ஒரு நாளும் விளையாடக் கூடாது.
5. மனசாட்சிக்கு விரோதமாகப் பொய் சொல்லக் கூடாது.
6. தன்னை நம்பி வந்தவரை ஒரு போதும் கெடுக்கக் கூடாது.

⋆ ஆ. பின்வரும் கருத்துக்கு ஏற்ற உலகநீதிப் பாடல்களை எழுதுக.

1. குமுதன் நல்லவன். அவன் தன்னை நம்பி வந்தவரைக் கெடுக்காமல் வாழ வைப்பான்.

2. அமுதன் சர்க்கஸில் வேலை செய்தாலும் நஞ்சுடைய பாம்புடன் விளையாட வேண்டாம் என்று அவன் அம்மா கூறினார்.

3. தீயவர்கள் நல்லவர்களுடன் சேரமாட்டார்கள். எனவே, நாமும் அவர்களைத் தவிர்க்க வேண்டும்.

LIVEWORKSHEETS